திரு. எம். சுரேந்திரன் : சார், குத்தகைக்கு எடுக்கும்போது, சாதாரண காலங்களில் விடுவதற்கு இத்தனை பரிசல்கள் தேவையாக இருக்கும், விசேஷ, திருவிழாக் காலங்களில் அதிகமான பரிசல்கள் வைத்துக்கொண்டு தான் குத்தகைக்கு எடுக்கவேண்டும் என்ற ஒரு கட்டளை இடப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த யோசனையையும் பரிசீலிக்கலாம்.

Officials of doubtful integrity

*249 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government is contemplating the preparation of a list of officials of doubtful integrity in the service ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, அரசுப் பணியில் உள்ளவர்களில் ஒழுக்க ஐயப்பாட்டுள்ளவர் பட்டியலை மத்திய அரசு தயாரிப்பது போல், இந்த அரசும் விஜிலன்ஸ் கமிஷன் மூலமாகத் தயாரிப்பதற்கு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது அப்படிப்பட்டதொரு முடிவு இல்லை என்று மூலக் கேள்விக்கு விடையளிக்கும்போதே குறிப்பிட்டேன்.

திரு. வ. ஜார்ஜ் : பொதுவாக, ரிடையர்மெண்ட் ஸ்டேஜில் உள்ள அரசாங்க அலுவலர்கள், தங்களுடைய பதவிக்காலம் முடியப் போகிறது, இருக்கிறபோதே சுரண்டிக் கொள்வது லாபம் என்று, ஐயப்படும் முறையில் பெரும்பாலானவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள். எனவே, அப்படிப்பட்டவர்களை விசேஷமான முறையில் இந்த அரசு கண்காணித்து வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியிலே குற்றச்சாட்டு இருக்கக் கூடாது. விதிகள் தெரிந்தவரே இப்படிக் கேட்கலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஓய்வுபெற இருக்கிறவர்கள் மாத்திரமல்ல, உத்தியோகத்திற்கு வந்த ஆரம்பத்திலே கூட தவறு செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள்தான். ஆனால், இந்தக் கேள்வி, என் அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை என்பதைப் பற்றியதாகும். அந்தப் பட்டியலை வெளியிடாமலிருப்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. அந்தப் பட்டியலில் அதிகாரிகளுடைய பெயர்கள் சேர்க்கப்பட்டுவிடுமானால் சந்தேகத்திற்கு உரியவர்கள் என்று சேர்க்கப்பட்டுவிடுமானால், அவர்கள் எப்படியாவது அறிந்துகொண்டு அந்தக் குற்றங்களிலிருந்து தங்களை மீட்டுக்கொள்வதற்கான வழிவகைகளைக் காணத் தொடங்குவார்கள். சேர்க்கப்படாதவர்கள், தங்கள் பெயர்கள்தான் சேர்க்கப்படவில்லையே என்ற காரணத்தால், தைரியமாகக் குற்றங்களைச் செய்ய ஆரம்பிப்பார்கள். இந்தக் காரணங்களால் அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை.

THIRU T. MARTIN : The cost of living has gone up but the salaries of Government servants are not adequate to the cost of iving. Hence easily they are driven to the temptation of bribery. In the circumstances... ... ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகாரிகள் குற்றம் செய்கிறார்கள் என்பதை நீங்கள் உறுதிப்படுத்துகிறீர்கள். அப்படிக் கேள்வி போடக் கூடாது.

THIRU T. MARTIN : I will modify the question. In view of the pathetic condition of the Government servants, they are easily prone to the temptation of bribery. Hence, in the circumstances, may I request the Hon. Minister to state whether the Government will come forward to abolish the 'DECOY' system which is adopted now in detecting cases of bribery ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதிலே அவர்களுடைய வாழ்க்கைத் தரம், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஊதியம் இவைகளை வைத்து இந்தக் தவறுகள் நடைபெறுகின்றன என்பதை இந்த அரசு ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால், அதிகத் தரம் வாய்ந்தவர்கள் என்று கருதப்படுகிறவர்கள் கூட இப்படிப்பட்ட தரங்கெட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார்கள் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இன்றைக்கிருக்கக்கூடிய நிர்வாக அமைப்பில், பல இலாக்காக்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால், பேப்பர்கள் தாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகப் பல பேர் இம்மாதிரி ஒழுக்கக்கேடான காரியங்களை தூண்டுகிற முறையில் செயல் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். 'ஒழுக்க ஐயப்பாடு உள்ளவர்கள்" என்று வெளியிடப்படக்கூடிய ஒரு நிலை இருந்தால் அவர்கள் இன்னும் சிறிது ஜாக்கிரதையாகவும் பொறுப்புடனும் நடந்துகொள்ள முடியும் என்பதை அரசாங்கம் சிந்திக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே சொன்னேன். அப்படி ஐயப்பாடு உள்ளவர்களை அரசாங்கம் பார்வையிலே வைத்திருக்கும். அதற்கான துறையொன்று இருக்கிறது. அவைகளைக் கண்டுபிடிக்கும் துறை. அது பார்வையில் வைத்திருக்கும். பட்டியல் வைத்திருந் தால் அவர்கள் தப்பித்துக்கொள்வதற்குத்தான் பயன்படும். ஆகவே, அந்த முறை வேண்டாம் என்று சொன்னேன்.

திரு. சா. மெய்யப்பன் : ஒழுக்கமின்மை என்பது லஞ்சம் ஒன்றுதானா அல்லது பஞ்சமா பாதகங்களும் சேர்ந்ததா ? முற் பகல் 9-30

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : லஞ்சம், வஞ்சம் எல்லாம் ஒன்றுதான்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : அநேகமாக லஞ்சத்திற்குக் காரணமாக இருப்பது எந்தப் பேப்பர்களானாலும் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் வைத்திருக்கலாம், கேள்வி கேட்பதற்கு இல்லை என்கிற நிலைதான். அப்படியின்றி இத்தனை நாட்களுக்கு மேல் யாரிடம் எந்தப் பேப்பர் இருந்தாலும் உடனே அவர்பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு வழி வகுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தமாதிரி நடவடிக்கை எடுப்பது மட்டும் அல்ல. அந்தப் பேப்பரைத் தள்ளுவதற்கு முயற்சி எடுப்பதும் பெரிய குற்றமாகும்.

திரு. கே. விநாயகம் : இப்படி உத்தியோகஸ்தர்களை சந்தேகிப்பது நமக்கே இழுக்கல்லவா ? ஒருவர் நேர்மையாக இருக்கிறார் என்று சொல்லலாம். குற்றம் செய்தால் குற்றம் செய்கிறவர் என்ற லிஸ்டில் சேர்க்கலாம். அப்படியின்றி சந்தேக நிலையில் இருப்பவர் என்பதாக ஆங்கிலத்தில் சொல்வார்களே—

Democle's sword hanging in the air.

என்பதாக, அதுபோன்று வைப்பது தவருன பாதையில் போகும்படி செய்யாதா ? இந்த முறையை அறவே கைவிட அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த முறையே இல்லை என்கிற போது எப்படிக் கைவிடுவது ?

திரு. நா. வீராசாமி : அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிருர்கள் என்று சொல்லுகிருர்கள். பொதுவாக லஞ்சம் கொடுக்கக்கூடிய காரணத்தினுல் தான் வாங்குகிருர்கள். வாங்குகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தண்டனையைப்போல கொடுக்கிறவர்களுக்கும் தண்டனை கொடுக்க அரசு மூன்வருமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : வாங்குகிறவர்கள், கொடுக்கிறவர்கள் இரண்டு பேர்களுமே லஞ்சக் குற்றத்திற்கு ஆளாக்கப்படுபவர்கள் தான்.

திரு. கே. என். குமாரசாமி: இந்த லஞ்சக் குற்றத்தைக் கண்டுபிடிக்க ஒரு இலாக்கா வைத்திருக்கிருர்கள். இவ்வளவு பெரிய நிர்வாகத்தில் எங்கே, யார் குற்றம் செய்கிருர்கள் என்பதை எப்படி அவர்களால் கண்டு பிடிக்க முடியும் ? அதனுல் தான் குற்றம் அதிகரிக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போதிருக்கிற இலாக்காக்கள் கூடுமான வரையில் லஞ்சக் குற்றத்தைக் கண்டுபிடித்து வருகின்றன. இன்னும் விரிந்த அளவில் கண்டுபிடிக்க அரசு வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எந்தத் துறையில், எந்தப் பகுதியில் இந்தக் குற்றங்கள் நடைபெறுகின்றன என்பதை ஆராய்ந்து நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள இந்த இலாக்காவை எந்த அளவுக்கு விஸ்தரிக்கலாம் என்பது யோசனையில் இருக்கிறது.

திரு. செஞ்சி. வெ. முனுசாமி : லஞ்சம் வாங்கிய குற்றத்திற்கு தண்டனையாக அந்த அதிகாரி வேலையில் இருந்து நீக்கப்படுகிருர். அப்போதே அவர் எந்த அளவுக்கு லஞ்சம் வாங்கியிருப்பார் என்பதையும் அசெஸ் செய்து அவருடைய சொத்தில் இருந்து அந்தத் தொகையை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போதே அந்த நிலை இருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : லஞ்சம் வாங்குபவர் தண்டிக்கப்படுவது போல, கொடுப்பவரும் தண்டிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் சொன்ஞர். ஆனுல் இதுவரை நாம் ஒருவரிடம் பணம் கொடுத்து கொடுக்கச் சொல்லித்தானே வாங்குபவரைப் பிடித்து வருகிருேம். எங்கே கொடுப்பவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த இலாக்கா ஒருவரிடம் கொடுத்து கொடுக்கச் சொல்வது அல்ல. கொடுப்பவர்கள்—என்னை கொடுக்கச் சொல்லி கேட்கிருர். நான் கொடுக்கப்போகிறேன்" என்று துப்பு கொடுத்துச் செய்கிருர்களே தவிர வேறு இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : லஞ்சம் வாங்குபவர்களுக்கு ஒரு வருடம் தண்டனை என்றுல் கொடுப்பவர்களுக்கு அதைப்போல இரண்டு மடங்கு, மூன்று மடங்கு தண்டனை கொடுக்க அரசு சட்டம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : லஞ்சம் வாங்கியவர், கொடுத்தவர் என்கிற நிலையில் தண்டனை பிரித்தே கொடுக்கப்படுகின்றன.

திரு. எம். எஸ். மணி: லஞ்சம் கொடுப்பவர்களுக்கு, வாங்கியவர்களுக்குத் தண்டனை அளிக்கப்படுவது போல தண்டனை அளிக்கப்படுவதாகச் சொன்ஞர்கள். வாங்கிக் கொடுக்கிற—இண்டர்மீடியரீஸ்—இவர்களுக்கும் தண்டனை கொடுக்கப்படுமா ? சட்டமன்ற அங்கத்தினர்கள்—வழக்கு அறிஞர்கள் பீஸ் என்ற முறையில் வாங்கிக்கொண்டு சிபார்சு செய்தாலும் . .

THIRU K. VINAYAKAM : Sir, I object to the statement of the hon. Member. The lawyer is permitted to take prescribed fees and then argue his case. It is not considered as bribery. It is considered as "fees". I request you, Sir, to please pull up the hon. Member.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிக்கவேண்டும். சட்ட மன்ற அங்கத்தினர் என்று சொல்வது சரியல்ல. வழக்கு அறிஞர் வாங்குவது—ஆதரைஸ்டு பீஸ் ஆகும்.

திரு. எம். எஸ். மணி : சிபார்சு செய்வதற்காக வாங்குவதும் தவறு தானே. (மணி அடிக்கப்பட்டது).

அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள் மாநாடு

* 250 வினு.— **திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) N.G.G.O. க்களின் 44-வது மாநாட்டில் எடுத்த முடிவுகள் சர்க்காருக்கு தெரிவிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில் அதன் விபரம் என்ன ?

(உ) அவற்றின் மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ)அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள் சங்கம் கூட்டிய 44-வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் அண்மையில் அரசாங்கத்துக்கு கிடைத்தன.

(இ) and (உ) சம்பந்தப்பட்ட துறைகள் அத்தீர்மானங்கள் குறித்து ஏற்புடைய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சில அதிகாரிகள் பெண் ஊழியர்கள் மீது தவருன முறையில் நடந்துகொண்டார்கள் என்பதாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது போன்ற குற்றச்சாட்டுகளைச் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றியது இந்தக் கேள்வி.

திரு. வி. கே. கோதண்டராமன்: அதைத் தான் சொல்கிறேன். இரகசிய குறிப்பேடுகளில் பெண் ஊழியர்களைப் பற்றி தவருன முறையில் நடந்துகொண்டார்கள் என்று எழுதப்பட்டதன் காரணத்திஞல் அவர்களது குடும்பங்களிலே தகராறுகளே ஏற்பட்டிருப்பது தெரியுமா ? ஆகவே 1966-ல் தூத்துக்குடி திராவிட முன்னேற்றக் கழக மகாநாட்டிலேயே இரகசியக் குறிப்பேடுகள் ஒழிக்கப்படும் என்று தீர்மானம் போட்டிருக்கிருர்களே, அந்த அடிப்படையில் உடனடியாக அதை ஒழிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உடனடியாக ஒழித்துக்கட்டுவதாக இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த இரகசியக் குறிப்பேடுகளைப் பொறுத்த வரையில் உடனடியாக அரசாங்கம் ஒழிப்பதற்குத் தயாராய் இல்லை என்ருலும், மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்யத் தயாரா ? மேலும் என்.ஜி. ஓ க்களுடைய மகாநாட்டில் போடப்பட்ட தீர்மானங்களை முன்பும் முதல் அமைச்சருக்கு அனுப்பி யிருக்கிருர்கள். இப்போதும் அனுப்பியிருக்கிருர்கள். அவர்களது முக்கியமான கோரிக்கைக்கு இணங்க இரண்டாவது பே கமிஷன் நியமிக்க அரசு முன் வருமா ?